[30th July 1965

MR. SPEAKER.—* Question No. 39 stands postponed.

ஆடுதுறை தொகுதியில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்

* 40 கேள்வி.—திரு. கோ. சி. மணி: கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1962-ம் வருடத்திலிருந்து இன்று வரை ஆடுதுறை தொகுதியில் துவக்கப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் எத்தனை ?

(இ) அவற்றால் கொடுக்கப்பட்ட கடன் எவ்வளவு ?

(உ) வசூலிக்கப்பட்ட, மற்றும் வசூலிக்கப்படவேண்டிய தொகைகள் எவ்வளவு ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: (அ) 1962-லிருந்து ஆடுதுறைத் தொகுதியில் ஏழு சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

(இ) இந்த ஏழு சங்கங்களும் 1962-லிருந்து ரூ. 1,42,865 வரை கடன் வழங்கியுள்ளன.

(உ) இச் சங்கங்களுக்குச் சேரவேண்டிய வசூல் பாக்கி ரூ. 90,260-ல் இதுவரை ரூ. 73,829 வசூலாகியுள்ளது. 15,074 ரூபாய் மதிப்புள்ள கடனைத் திருப்பிச் செலுத்துவதற்காக கால நீட்சி கொடுக்கப்பட்டுள்ளது. வசூலாகாமல் பாக்கியாயுள்ள தொகை ரூ. 1,357.

திரு. கோ. சி. மணி : கனம் தலைவர் அவர்களே, இந்த சங்கங்களில் ஓவர் ட்யூஸ் இருக்கிற காரணத்தினால் புதியதாகக் கடன்கள் வழங்கப்படவில்லை என்ற தகவல் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : பொதுவாக சங்கங்கள் வாங்கிய கடன் தொகையைத் திருப்பிக் கொடுத்தால் தான் திரும்பவும் அவர்களுக்குக் கடன் கொடுக்க வசதியாக இருக்கும். கடனைத் திருப்பிக் கொடுக்கவில்லை என்றால், ரிசர்வ் பாங்கும் சென்டிரல் பாங்கும் மறுபடியும் கடன் கொடுப்பதற்கு தடைபோடுவதால் சில சிரமங்கள் ஏற்படுகின்றன. இருந்தாலும் அத்தியாவசியம் ஏற்படும்பொழுது, அதைப் பார்த்து கவனித்துச் செய்யவேண்டும்.

திரு. கோ. சி. மணி : ஒரு சங்கத்தில் 50 அங்கத்தினர்கள் கடன் வாங்கி இருந்தால், அதில் 40 பேர்கள் கடன் தொகையைத் திருப்பி கட்டியிருந்தாலும், அதில் 10 பேர்கள் திருப்பிச் செலுத்தாமல் இருக்கிற காரணத்தினால், ஓவர்ட்யூஸ் அந்த சங்கத்தில் இருக்கிறது என்று கருதி, மற்ற அங்கத்தினர்களுக்கும் கடன் கொடுக்காமல் இருக்கும் தகவல் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா ? அதாவது, சென்டிரல் பாங்கு கடன் வழங்குகிறது. பணம் பாக்கி இருந்தால் மறுபடியும் கடன் கொடுக்கக்கூடாது என்று கடன் கொடுப்

30th July 1965]

பதை நிறுத்திவைத்து உத்தரவு போடுகிறார்கள். அப்படிப் பட்ட தகவல் ஏதாவது அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : சென்டிரல் பாங்கு கடன் கொடுக்கிறார்கள். சென்டிரல் பாங்குக்கு சொஸைடிகள் கடனைத் திருப்பிக் கொடுத்தால் தான் அவர்கள் அந்தப் பணத்தை வைத்து நிர்வாகத்தை நல்ல முறையில் நடத்த முடியும். ஆகவே தான், சென்டிரல் பாங்கு இதுபோன்ற கண்டிஷன்ஸை வைத்திருக்கிறார்கள்.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : மத்திய பாங்கு கடனை வசூலிப்பதற்கு இம்மாதிரி நிபந்தனைகள் போடுகிறார்கள். விவசாய அபிவிருத்தியை முன்னிட்டு, இனிமேலாவது இம்மாதிரி நிபந்தனைகளை மத்திய பாங்கு விதிக்காமல் இருப்பதற்கு அரசாங்கம் உத்தரவிடுமா ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : மத்திய பாங்கு இதைப் போல இருக்கக்கூடிய சில கண்டிஷன்ஸ் விதிப்பது தான் நல்லது.

கனம் சபாநாயகர் : ஓவர் ட்யூ பணத்தை கலெக்ட் பண்ணாமல் இருக்கும்படி உத்தரவு போடுவது என்றால், பின்னால் எப்படிப் பணம் வரும்? நிர்ப்பந்தம் ஏதாவது வேண்டாமா?

கேள்விகள் முடிவடைந்தன.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—PRIVILEGE MATTERS

(1) Delay in placing the Rules framed by the Rural Development and Local Administration and the Revenue Departments on the Table of the House.

Mr. SPEAKER : The hon. Member Sri M. Kalyanasundaram has given notice of a privilege matter regarding the delay in placing the rules framed by the Rural Development and Local Administration and Revenue Departments on the Table of the House.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் சபாநாயகர் அவர்களே, நான் இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவது இந்தச் சபையின் முன் வைக்கக்கூடிய விதிகள் சம்பந்தமாக ஏற்படக்கூடிய காலதாமதத்தைப் பற்றியது. இரண்டு உதாரணங்களை நான் குறிப்பிட விரும்புகிறேன். ஒன்று ஆர்.டி.எல். ஏ. இலாகாவினுடைய பஞ்சாயத்து தற்காலிக தலைவர்கள் சம்பந்தமாக வெளியிட்டுள்ள விதிகள். அந்த விதிகள் மார்ச்சு மாதம் 4-ம் தேதி அரசாங்க உத்தரவின் மூலம் பிறப்பிக்கப்பட்டு, மார்ச்சு 4-ம் தேதியன்றே கெஜட்டில் வெளியிடப்பட்டுள்ளன. அந்த விதிகள் தற்காலிக தலைவர்களுடைய அதிகாரம், கடமை